## வெண்பட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டை

# தேசிய அளவில் முதலிடத்திற்குக் கொண்டுவர நடவடிக்கை!

### பேரவையில் - பட்டு வளர்ச்சித் துறை மானியத்தில் 19 அறிவிப்புகளை வெளியிட்டு அமைச்சர் தா.மோ.அன்பரசன் பதிலுரை!

**சென்னை, ஜீன் 29 -**

**வெண்பட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டை தேசிய அளவில் முதலிடத்தில் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று பட்டு வளர்ச்சித் துறை மானியத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் பதிலுரையில் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

இது குறித்து பட்டு வளர்ச்சித் துறை மானியத்தில் தா.மோ.அன்பரசன் அளித்த பதிலுரை வருமாறு: -

**அமைச்சர் தா.மோ. அன்பரசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்கி, பட்டு வளர்ச்சித் துறையினை பொறுத்தவரையில் பட்டு உற்பத்தியானது முதன் முதலில் கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் துவங்கி, சென்னை மாவட்டம் தவிர தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இன்றைக்கு உற்பத்திச் செய்யப்பட்டு வருகிறது. வெண்பட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டை தேசிய அளவில் முதலிடத்திற்கு கொண்டு வர நம்முடைய அரசின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகளை தற்போது எடுத்து வருகிறோம். கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் மல்பெரி நடவு செய்யும் பட்டு விவசாயிகளுக்கு 3,500 ஏக்கருக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த ஊக்கத் தொகை, கழக ஆட்சியில் 6,500 ஏக்கராக உயர்த்தி கடந்த 3 ஆண்டுக் கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 10 ஆயிரத்து 395 பட்டு விவசாயிகளுக்கு ரூ.18 கோடி ஊக்கத் தொகை வழங்கப்பட்டு உள்ளது. இதன் விளைவாக கடந்த 3 ஆண்டுகளில் மல்பெரி பரப்பு 16 ஆயிரத்து 500 ஏக்கராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

“பட்டுப் புழு வளர்ப்பு மனைக்கான” மானியம் கடந்த ஆட்சியிலே ரூ.87,500 தான் கொடுத்தார்கள். நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு, ரூ.1 இலட்சத்து 20 ஆயிரமாக உயர்த்தி, இதுவரை 2,300 விவசாயிகளுக்கு ரூ.25 கோடியே 28 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. பட்டு விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, கழக ஆட்சியில் முதல் முறையாக பவர் டில்லர் இயந்திரம் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டு, நம்முடைய அரசு பொறுப்பேற்ற 3 ஆண்டு களில், ரூ.2 கோடியே 80 இலட்சம் மதிப்பில் 800 முன்னோடி பட்டு விவசாயிகளுக்கு பவர் டில்லர் இயந்திரங்கள் வழங்கப்பட்டு ள்ளது. கழக அரசு பொறுப்பேற்றது முதல், ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் மூலமாக 15 ஆயிரத்து 776 பயனாளிகளுக்கு ரூ.102 கோடியே 2 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

கழக அரசினுடைய சீரிய திட்டங்களால் 1,834 மெட்ரிக் டன்னாக இருந்த மாநிலத்தின் பட்டு உற்பத்தி 844 மெட்ரிக் டன் அதிகரித்து, தமிழ்நாட்டில் இது வரை இல்லாத வகையில் 2 ஆயிரத்து 678 மெட்ரிக் டன் பட்டு உற்பத்திச் செய்யப்பட்டு ள்ளது. இது தேசிய அளவில் வெண்பட்டு உற்பத்தியில் தமிழகம் 2வது இடத்தினை வகிக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**கைவினைஞர்களின் வாழ்வாதாரம்!**

அதைப்போல, பூம்புகார் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கைவினைஞர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்திடவும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும், கலைப் பொருட்களுக்கு நல்ல விலை கிடைத்திடுவதற்காக, நம்முடைய இதயங்களிலே என்றைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய, தலைவர் கலைஞர் அவர்கள் 1973ஆம் ஆண்டு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் ஒரு பொதுத் துறை நிறுவனமாக “பூம்புகார்” என்ற பெயரில் துவக்கப்ப ட்டது.

தற்போது, 7 உற்பத்தி நிலையங்கள் மற்றும் 20 விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகிறது. கழக அரசு பொறுப்பேற்ற பின், கடந்த 3 ஆண்டுகளில் ரூ.118 கோடி மதிப்பிலான கைவினைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. கடந்த அ.தி.மு.க ஆட்சியில், 2018/2019 ஆம் ஆண்டில் மட்டும் ரூ.41 கோடி விற்பனை செய்த பூம்புகார் நிறுவனம், பூம்புகார் வரலாற்றிலேயே முதன் முறையாக கடந்த ஆண்டு, ரூ.48 கோடி பொருட்களை விற்பனை செய்து சாதனை படைத்துள்ளது என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்த பட்டு வளர்ச்சித் துறையின் சார்பில் 14 அறிவிப்புகளும், பூம்புகார் சார்பிலே 5 அறிவிப்புகளும் நான் வெளியிடுகிறேன்.



### தமிழ்நாட்டு கைவினைஞர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் பூம்புகார்!

**அறிவிப்புகள்**
**பட்டுவளர்ச்சித் துறை**

1. தரமான பட்டுக்கூடு உற்பத்தியினை ஊக்குவிக்க, 2350 பட்டு விவசாயிகளுக்கு தனி பட்டுப்புழு வளர்ப்பு மனை அமைக்க ரூபாய் 24 கோடியே 73 இலட்சத்து 13 ஆயிரம் உதவித்தொகை வழங்கப்படும்.

2. அதிக மகசூல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கிட 2024-2025 ஆம் ஆண்டில் 6,500 ஏக்கருக்கு ரூபாய் 7 கோடியே 83 இலட்சத்து 75 ஆயிரம் நிதியுதவி வழங்கப்படும்.

3. ட்டுப்புழு வளர்ப்பில் பட்டுக்கூடுகளின் தரத்தை உயர்த்திடவும், உற்பத்தித் திறனை அதிகரித்திடவும் மற்றும் பண்ணை வேலையாட்களைச் சார்ந்திருப்பதை குறைத்திட வும், 2024-2025 ஆம் ஆண்டில் 2,350 பட்டு விவசாயிகளுக்கு நவீன பட்டுப் புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் ரூபாய் 6 கோடியே 80 இலட்சத்து 63 ஆயிரம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

4. பட்டுப்புழு வளர்ப்பிற்கு சுகாதாரமான சீதோஷ்ண நிலையை வழங்கிட சீரான நோய்த்தடுப்பு முறைகளைப் பின்பற்றுவதன்மூலம் பட்டுப்புழுக்களை பூச்சி மற்றும் நோய்த் தாக்குதலினால் ஏற்படும் மகசூல் இழப்பைத் தடுத்து நல்ல பட்டுக்கூடு அறுவடையை உறுதி செய்திட 2024-2025 ஆம் ஆண்டில், 2,350 பட்டு விவசாயி களுக்கு பட்டுப்புழு வளர்ப்பு நோய்த்தடுப்பு மருந்துப் பொருட்கள் ரூபாய் 50 இலட்சத்து 63 ஆயிரம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

5. புதிதாக பட்டுத் தொழிலில் ஈடுபடும் பட்டு விவசாயிகளுக்கு மல்பெரித் தோட்டப் பராமரிப்பு மற்றும் பட்டுப் புழு வளர்ப்புத் தொழில் நுட்பங்கள் குறித்து பயிற்சி வழங்கிட ஏதுவாக 2024-2025 ஆம் ஆண்டில் ரூபாய் ஒரு கோடியே 64 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் 2,350 பட்டு விவசாயிகளுக்கு பட்டுத்தொழில் குறித்த தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்படும்.

6. முன்னோடி பட்டு விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், 2024-2025 ஆம் ஆண்டில் 250 முன்னோடி பட்டு விவசாயிகள் பயன் பெறும் வகையில், தலா ரூபாய் 35,000/வீதம், 250 பவர் டில்லர்கள் ரூபாய் 87 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

7. புதிதாக பட்டுத் தொழிலில் ஈடுபடும் பட்டு விவசாயிகளுக்கு தேவைப் படும் மல்பெரி நாற்றுகளை உற்பத்தி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், 2024-2025 ஆம் ஆண்டில், 40 ஏக்கர் பரப்பில் கிசான் மல்பெரி நாற்றங்கால் அமைக்கும் விவசாயிகளுக்கு உதவித் தொகையாக ரூபாய் 15 இலட்சம் வழங்கப்படும்.

8. இளம்புழு வளர்ப்பில் தரமான மல்பெரி இலைகளை உணவளிப்பதிலும், சுகாதாரம் பேணுவதிலும், தேவையான தட்பவெப்ப நிலைகளைப் பராமரிப்பதிலும் சிறப்பான கவனிப்பு தேவைப்படுகிறது. இளம் பட்டுப்புழுக்களைப் பெற்று வளர்ப்பதன் மூலம் விவசாயிகள் தரமான பட்டுக் கூடுகளை உற்பத்தி செய்து அதிக வருமானம் பெற முடிகிறது. எனவே, பட்டு விவசாயி களுக்கு தரமான இளம் பட்டுப்புழுக்கள் வளர்ப்பு செய்து விநியோகம் செய்திட ரூபாய் 39 இலட்சம் மதிப்பீட்டில் 3 பெரிய அளவிலான இளம்புழு வளர்ப்பு மையங்கள் அமைக்க மாநில அரசு நிதியாக ரூபாய் 9 இலட்சத்து 75 ஆயிரம் வழங்கப்படும்.

9. மாநிலத்தின் பட்டு நூற்புப் பிரிவை மேம்படுத்தி தரமான பட்டு நூல் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில், ரூபாய் 3 கோடியே 45 இலட்சத்து 37 ஆயிரம் மதிப்பில் கூடுதலாக 4 மோட்டார் பொருத்திய சர்க்கா பட்டு நூற்பு அலகுகள், 5 பலமுனை பட்டு நூற்பு அலகுகள் மற்றும் 2 தானியங்கி பட்டு நூற்பு அலகுகள் நிறுவப்படும் மற்றும் 2 காட்டேஜ் பேசின் பட்டு நூற்பு அலகுகள் மேம்படுத்தப்படும். இதற்கென 2024-2025 ஆம் ஆண்டில் மாநில அரசு நிதியாக ரூபாய் 86 இலட்சத்து 10 ஆயிரம் வழங்கப்படும்.

10. தருமபுரி மாவட்டத்தில் செயல்பட்டுவரும் அரசு பட்டுக்கூடு அங்காடி பழமையான மற்றும் பரிவர்த்தனை அடிப்படையில் மாநிலத்திலேயே பெரிய பட்டுக்கூடு அங்காடியாகும். மூன்று மாடி கட்டடத்தில் செயல்பட்டு வரும் இப்பட்டுக்கூடு அங்காடி ஒரு நாளைக்கு அதிகபட்சமாக 3 டன்கள் பட்டுக்கூடு பரிவர்த்தனை செய்யும் திறன் கொண்டது. தருமபுரி பேருந்து நிலையத்திற்கு அருகிலேயே அங்காடி அமைந்துள்ளதால், இங்கு பட்டுக்கூடு பரிவர்த்தனைக்கு வரும் விவசாயிகள் மற்றும் நூற்பாளர்கள் வாகனங்களை நிறுத்த முடியாமல் சிரமப்படுகின்றனர்.

பட்டுக்கூடுகள் சேமிப்பு வசதி மற்றும் தங்குமிட வசதிகளுடன்கூடிய ஒற்றை மாடிக் கட்டடத்தில் பட்டுக்கூடு அங்காடியின் பட்டுக்கூடு பரிவர்த்தனை திறனை அதிகரிக்க விவசாயிகள் மற்றும் நூற்பாளர்களின் தொடர்ச்சியான கோரிக்கையை ஏற்று, 2024 - 2025 ஆம் ஆண்டில் சோகத்தூர் அரசு பட்டுப் பண்ணை வளாகத்தில் மின்னணு ஏலமுறை (eAuction) உட்பட நவீன அம்சங்களுடன்கூடிய ஒருங்கி ணைந்த பட்டுக்கூடு அங்காடி வளாகம் அமைக்கப்படும்.

**புதிய பட்டுக் குழு அங்காடி வளாகம்**

11. நாமக்கல் மாவட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பட்டு விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக்கூடுகளை விற்பனை செய்திட ஏதுவாக நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் தொழில்நுட்ப சேவை மைய வளாகத்தில் தற்காலிகமாக செயல்பட்டுவரும் அரசு பட்டுக்கூடு அங்காடியில் 2023-2024 ஆம் ஆண்டில் ரூ.4.00 கோடி மதிப்பில் 110 மெட்ரிக் டன் பட்டுக்கூடுகள் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது. நாமக்கல் மாவட்டத்தில் கூடுதலாக பட்டுக்கூடுகள் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்டும் இடப்பற்றாக்குறை காரணமாக குறைந்த அளவு பட்டுக்கூடுகள் மட்டுமே பரிவர்த்தனை செய்யப்பட்டு வருகிறது. இதனை கருத்தில்கொண்டும், பட்டுக்கூடு அங்காடியில் மின்னணு ஏலமுறையினை (eAuction) நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற பட்டு விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்றும் நாமக்கல் மாவட்டம், ராசிபுரம், அணைக்கட்டிப்பாளையம் பகுதியில் மின்னணு ஏலமுறை (eAuction) உட்பட அனைத்து வசதிகளுடன்கூடிய புதிய பட்டுக்கூடு அங்காடி வளாகம் ரூபாய் 2 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

12. வெண்பட்டுக்கூடு உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை ஊக்குவிக்கும் வகையில், 2024-2025 ஆம் ஆண்டில், மாநில அளவில் மூன்று சிறந்த பட்டு விவசாயி களுக்கு முறையே, ரூபாய் 1,00,000/, ரூபாய் 75,000/ மற்றும் ரூபாய் 50,000/ என முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் ரொக்கப் பரிசுகள் வழங்கிட ரூபாய் 2 இலட்சத்து 25 ஆயிரம் நிதியுதவி வழங்கப்படும்.

13. 2024-2025 ஆம் ஆண்டில் தரமான, நோயற்ற பட்டு முட்டைத் தொகுதிகள் உற்பத்திக்குத் தேவையான விதைக்கூடு களை உற்பத்தி செய்து அரசு வித்தகங்க ளுக்கு வழங்கிடும் நோக்கில், அதிகளவில் தரமான விதைக் கூடுகள் உற்பத்தி செய்யும் விதைக்கூடு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில், மாநில அளவில் முறையே ரூபாய் 1,00,000/, ரூபாய் 75,000/ மற்றும் ரூபாய் 50,000/ என முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் ரொக்கப் பரிசுகள் வழங்கிட ரூபாய் 2 இலட்சத்து 25 ஆயிரம் நிதியுதவி வழங்கப்படும்.

14. 2024-2025 ஆம் ஆண்டில் தரமான பட்டுநூல் உற்பத்தியினை ஊக்குவிக்கும் வகையில், அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்தில் அதிகளவு பட்டு வர்த்தகம் செய்யும் சிறந்த மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்கள் மற்றும் சிறந்த மூன்று பலமுனை பட்டு நூற்பாளர்களுக்கு மாநில அளவில் முறையே ரூபாய் 1,00,000/, ரூபாய் 75,000/ மற்றும் ரூபாய் 50,000/ என முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் ரொக்கப் பரிசுகள் வழங்கிட ரூபாய் 4 இலட்சத்து 50 ஆயிரம் நிதியுதவி வழங்கப்படும்.

**தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்**

1. தமிழ்நாட்டின் பல்வேறு குழுமங்களில் உள்ள கைவினைஞர்களின் திறமையை மேம்படுத்தும் வகையில், காகிதக்கூழ், களிமண், சுடுகளிமண், சித்திரத்தையல், மரச்சிற்பம், தஞ்சாவூர் ஓவியம், பாய் நெசவு, பிரம்பு மற்றும் மூங்கில் போன்ற கைத்திறத் தொழில்களில் 30 கைவினைஞர்கள் கொண்ட 20 குழுக்களுக்கு ஒன்று முதல் 3 மாத கால அளவுக்கு, புதிய வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டுப் பயிற்சிகள் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் அளிக்கப்படும். இப்பயிற்சிகள்மூலம் 600 கைவினைஞர்கள் பயனடைவார்கள்.

2. தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு கைவினைஞர்களின் குழுமங்களைக் கண்டறியவும், அவர்களின் விவரங்களை ஒரு தனி இணையதளத்தில் சேகரித்து அதன்மூலம் அரசின் பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்க ளை அவர்கள் பெறுவதற்கும், ஒரு அடிப்படை கணக்கெடுப்பு, ஒருங்கிணைந்த கைப்பேசி செயலிமூலம் மேற்கொள்ளப்படும். இது அவர்களுக்கு அரசு வகுக்கும் திட்டங்கள், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், இலவச தொழில் உபகரணப்பொருட்கள், சந்தைப்படுத்துவதற்கான வழிகள் மற்றும் பல்வேறு உதவிகள் பெற உதவும்.

3. தமிழ்நாட்டில், 14 வகையான கைவினைப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது. இந்த கைவினைப்பொருட்கள் ஒவ்வொன்றும் திறமையான கைவினைஞர்களால் நேர்த்தியாக படைக்கப்பட்டவை ஆகும். இப்புவிசார் குறியீடு பெறப்பட்ட அனைத்து கைவினைப் பொருட்களையும் ஒரே இடத்தில் காட்சிப்படுத்தவும் மற்றும் விற்பனை செய்திடவும் சென்னை பூம்புகார் விற்பனை நிலையத்தில் ஒரு தனி அரங்கு ரூபாய் ஐம்பது இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

4. குறைந்த செலவில் பித்தளை கலைப் பொருட்களை உற்பத்தி செய்து, சர்வதேச சந்தையில் வணிகம் செய்யும் மொரதாபாத் (உ.பி.) குழுமத்தில் தயாரிக்கப்படும் அழகிய பித்தளை கலைப் பொருட்கள் குறித்த செயல்முறைகள் மற்றும் உத்திகள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், தமிழ்நாட்டில் உள்ள 25 கைவினைஞர்களுக்கு 15 நாட்கள் கொண்ட ஒரு பயிற்சி சுற்றுலாவாக ரூபாய் பதினைந்து இலட்சம் செலவில் மொரதாபாத்திற்கு அழைத்துச்செல்ல ஏற்பாடு செய்யப்படும்.

5. தமிழ்நாடு கைவினைப் பொருட்களை நாடெங்கிலும் பிரபலப்படுத்தவும், தமிழ்நாடு கைவினைஞர்களின் தயாரிப்புகளை விற்பனை செய்ய ஊக்குவிக்கவும் சென்னை, புதுதில்லி போன்ற முக்கிய நகரங்களிலும் மற்றும் மாமல்லபுரம், கன்னியாகுமரியில் உள்ள நகர்ப்புற கண்காட்சித் திடல்களிலும் கைவினைப் பொருட்கள் கண்காட்சிகள் ரூபாய் ஒரு கோடி செலவில் நடத்தப்படும்.

இன்றைக்கு, இந்தத் துறையின் சார்பிலே, உறுப்பினர்கள் பூம்புகாரில் 13 வெட்டுத் தீர்மானங்களும், பட்டு வளர்ச்சித் துறையில் 1 வெட்டுத் தீர்மானமும் தந்திருக்கி றார்கள். ஆக, என்னுடைய பதிலுரையிலே அதற்கு விளக்கம் தரப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள், தங்களது வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் பேசினார்.

---

### ஓசூரில் பன்னாட்டு விமான நிலையம்!

## தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கான - முதல்வரின் மகத்தான அறிவிப்பு!

### சட்டப்பேரவையில் - தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா புகழாரம்!

**சென்னை, ஜூன் 28–**

**சட்டப்பேரவையில், ஒசூரில் பன்னாட்டு விமான நிலையம் அமைக்கப்படும் எனும் முதல்வரின் அறிவிப்புக்கு நன்றி தெரிவித்துப் பேசிய தொழில் துறை அமைச்சர் டிஆர்.பி.ராஜா, “தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கான ஓர் மகத்தான அறிவிப்பு இது” என்று புகழாரம் சூட்டினார்.**

சட்டப்பேரவையில் இது தொடர்பான அவரது பேச்சு வருமாறு:



தமிழ்நாட்டில் விடியல் ஆட்சி பிறந்தது முதல் நமது திராவிட நாயகன் அவர்களின் ஆட்சி அமைந்த நாள் முதல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்துக்கு பரவலாக்கப்பட்ட வளர்ச்சி நிச்சயம் கிட்ட வேண்டுமென்பதில் மிகத் தெளிவாக, மிக உன்னிப்பாக கவனித்து, அந்த வளர்ச்சியை நோக்கி தமிழ்நாட்டை செலுத்தி வருகிறார்கள். ஆகையால்தான் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடந்தபோதுகூட அவர் இதன்மூலம் எத்தனை இலட்சம் கோடி ரூபாய் முதலீடுகள் வந்து சேரும் என்று அவர் கேட்கவில்லை. ஒவ்வொரு *review meeting*லும் அவர் கேட்ட கேள்வி எத்தனை இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிட்டும்; அது எந்தெந்த பகுதி மக்களுக்குக் கிட்டும் என்பதில்தான் அவர் மிகத் தெளிவாக இருந்து வந்தார். எனவே, முதலமைச்சர் அவர்களைப் பொறுத்த வரை, தமிழகத்தின் அனைத்து பகுதிகளுக்கும் பரவலாக்கப்பட்ட வளர்ச்சி உறுதி செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் அவர் ஆட்சி செய்து வருகிறார். ஆகையால்தான், GIM மூலமாகவே தென் மாவட்டங்களுக்கு வராத வளர்ச்சியை இப்போது கொண்டு சென்று சேர்த்து, தூத்துக்குடியில் அவ்வளவு பெரிய, 16 ஆயிரம் கோடி ரூபாய்க்கான முதலீட்டை அங்கு கொண்டுசென்று சேர்த்து, புதிய தொழில் வளர்ச்சியை தூத்துக்குடிக்கு கொடுத்தார்கள்.

அதேபோல, கோவை போன்ற பெருநகரங்களுக்கு புதிய தொழில் வளர்ச்சி வரவேண்டுமென்பதில் குறிப்பாக இருக்கிறார்கள். ஒசூரை பொறுத்த வரை, இதேபோன்ற ஒரு *grand vision* உள்ள ஒரு தலைவராக முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் அந்தக் காலத்திலே இருந்ததனால்தான் ஒசூரில் கொண்டுவந்து சென்னைகாஞ்சிபுரம் *cluster*, கோவை *cluster*, ஓரளவுக்கு மதுரை *cluster* எல்லாம் வளர்ச்சியடைந்தாலும்கூட, ஒசூரில் *TVS* நிறுவனத்தைக் கொண்டு சென்று அங்கே புதிய நிறுவனத்தை அமைக்க செய்தார். இப்படி பல்வேறு கட்டங்களில் திராவிட ஆட்சி, திராவிட மாடல் ஆட்சி நடந்ததனால்தான் தமிழகத்துக்கு பரவலாக்கப்பட்ட வளர்ச்சி கிட்டுது. தற்போதைய இந்த அறிவிப்பை பொறுத்தவரை, ஒசூருக்கு மிகப் பெரிய ஒரு பிரம்மாண்டமான ஒசூர் 2.0 என்றுதான் இதை நாம் கூற வேண்டும். அப்படிப்பட்ட ஒரு மகத்தான வளர்ச்சி ஒசூருக்கு நிச்சயமாகக் கிடைக்கப் போகிறது. ஒசூரில் ஏற்கெனவே, *Tata Electronics, Ather Energy, Ola Electric, RollsRoyce* போன்ற பெருநிறுவனங்கள் அனைத்தும் அங்கே வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. அந்த *area*ல் மிகப் பெரிய தொழில் வளர்ச்சி. அதிலும் குறிப்பாக, மின்னணு ஏற்றுமதியில், *electronics exports* குறித்து முதலமைச்சர் அவர்கள் இப்போது பேசும்போதுகூட அறிவித்தார்கள். 9.56 பில்லியன் டாலர்ஸ் சென்ற ஆண்டு மட்டும் 80 ஆயிரம் கோடி ரூபாய்க்கான ஒரு *exports*ஐ தமிழகத்திலிருந்து செய்து, நெம்பர் 1 மாநிலமாகத் தமிழகம் இன்று திகழ்கிறது.

இந்த நேரத்தில் மேலும் ஒரு மகிழ்ச்சிகரமான விஷயத்தை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இந்த நல்லாட்சியில், இந்த ஆண்டு நிச்சயமாக 1 இலட்சம் கோடி ரூபாய்க்கான ஒரு *exports*ஐ தமிழ்நாடு நிச்சயமாக செய்யும். அப்படிப்பட்ட ஒரு மகத்தான இலக்கை நாம் எட்டத்தான் போகிறோம். அதை நோக்கி வளர்வதற்காகத்தான் இப்படிப்பட்ட விமான நிலைய விரிவாக்கங்களையெல்லாம் முதலமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்து சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். நாளை நடைபெறும் தொழில் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது இன்னும் பல விஷயங்களை நான் தெரிவிக்க இருக்கிறேன். எனவே, தொழில் துறையின் சார்பாக, தொழில் வளர்ச்சிக்காக, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக இப்படிப்பட்ட மகத்தான ஓர் அறிவிப்பை ஒசூர் பகுதிக்கு, ஒசூர், கிருஷ்ணகிரி, தருமபுரி போன்ற பகுதிகளின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

ஒரு டெல்டாகாரன் என்ற முறையில், திருச்சியில் உலகத்தரம் வாய்ந்த மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் தந்திருப்பதற்கு எங்களுக்கு மகிழ்ச்சி. ஆனால், அமைச்சர் அவர்களும்இங்கேகுறிப்பிட்டதைப் போல, அடுத்த கட்டமாக, நிச்சயமாக தஞ்சாவூருக்கும் மிகப் பெரிய ஒரு நூல் நிலையத்தை முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் அமருகிறேன்.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேசினார்.

---

### கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் மேல்முறையீடு செய்த

## 1.48 லட்சம் விண்ணப்பங்கள் ஏற்பு !

### சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அறிவிப்பு !



*சென்னை, ஜூன் 28-*

*கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் மேல்முறையீடு செய்தவர்களில் ஒரு லட்சத்து 48 ஆயிரம் விண்ணப்பங்கள் ஏற்கப் பட்டுள்ளதாக சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை தெரிவித்துள்ளது.*

*சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை சார்பில், சட்டப்பேரவையில், கொள்கை விளக்கக் குறிப்பு தாக்கல் செய்யப்பட்டது. அதில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கென 2023-24ம் நிதியாண்டில் 8 ஆயிரத்து 124 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், 2024-25ம் நிதியாண்டிற்கென 13 ஆயிரத்து 722 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.*

*திட்டத்தின் மூலம் கடந்த மார்ச் 31ம் தேதி வரை முகாம் வாழ் இலங்கை தமிழர் குடும்பங்கள் உட்பட ஒரு கோடியே 15 லட்சத்து 27 ஆயிரத்து 172 மகளிர் பயனடைந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*கலைஞர் உரிமைத் தொகை கோரி மேல்முறையீடு செய்தவர்களில் ஒரு இலட்சத்து 48 ஆயிரம் விண்ணப்பங் கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. நிராகரிக்கப் பட்ட மேல்முறையீடு விண்ணப்பதாரர்கள் விரும்பினால், நிராகரிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாள்களுக்குள் இ-சேவை மையம் வழியாக மேல்முறையீடு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

---



செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் அடுத்த இடைக்கழிநாடு பேரூராட்சிக்கு உட்பட்ட 5 வது வார்டு பகுதியில் மின் இணைப்பு இல்லாமல் குடிசை வீட்டில் வசித்து வரும் திமுக கழக கிளை செயலாளர் நாகூரான் மகள் அமிர்தம் நீட் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்று மருத்துவ படிப்பில் சேர்ந்துள்ளார். இந்நிலையில் காஞ்சி தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ.விடம் மருத்துவ படிப்பு படித்து வருவதால் மடிக்கணினி அரசு தொகுப்பு வீடு கட்டித்தர நாகூரானும் அவரது மகள் அமிர்தாவும் கோரிக்கை மனு அளித்தனர். இதனை அடுத்து முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி பேரூர் துணை செயலாளர் ஆர்.ரஞ்சித்குமார், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் எஸ். சரண்ராஜ் ஆகியோரின் ஏற்பாட்டில் 50 ஆயிரம் மதிப்பிலான மடிக்கணினி மற்றும் கல்வி ஊக்கத் தொகையினை பேரூராட்சி தலைவர் சம்யுக்தா அய்யனார் தலைமையில் க.சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் இனியரசு, பேரூர் செயலாளர் மோகன்தாஸ், உள்ளிட்ட திமுக கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.